## டவர் மண்டப திரையரங்கு மன்றம் - 2014

டவர் மண்டப திரையரங்கு மன்றத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் மன்றத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கை மன்றத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மன்றத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து டவர் மண்டப திரையரங்கு மன்றத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட போதிலும் பாவனையில் உள்ள, ரூபா 173,403,545 கிரயமான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு நியாயமான பெறுமதியினை கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 105,238 கிரயமான சொத்துக்களின் உரித்தானது மன்றத்திடம் இல்லாத போது அவை மன்றத்தின் சொத்துக்களாக கருதப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருந்தன.

(இ) பெறுமானத்தேய்வு கணிப்பீட்டு வழு காரணமாக மீளாய்வாண்டின் கட்டிடங்கள் மற்றும் ஒலிப்பதிவுக்கூட உபகரணங்களுக்குரிய பெறுமானத்தேய்வு அளவு ரூபா 446,304 இனால் குறைவாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) இந்திய நடன நிகழ்ச்சியொன்றில பங்குபற்றியோருக்கான அமையச் செலவினங்களுக்காக அரசு வழங்கியிருந்த ரூபா 793,500 தொகையானது மன்றத்தின் வருமானமொன்றாக அல்லது செலவினமொன்றாக கணக்கு வைப்பதற்கு பதிலாக வெளிநாட்டு பிரயாணச் செலவினங்களில் கழிக்கப்பட்டுள்ளமையால் வெளிநாட்டுப் பிரயானச் செலவினம் மற்றும் மன்றத்தின் வருமானம் அத் தொகையால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் இறுதியில் புத்தகப் பெறுமதி ரூபா 1,432,858 கொண்ட இருப்புக்கள் பௌதீக மெய்மையாய்வு செய்யப்பட்டு தேவையான சீராக்கங்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்குகளின் மூலம் போதியளவான வெளிப்படுத்தல்களை மேற்கொள்ளாமை**

எல்பின்ஸ்டன் திரையரங்கினை நவீனமயப்படுத்தும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட 2012 மே 31 ஆந் திகதியிலிருந்து தேசிய கட்டிடங்கள் திணைக்களத்தால் மதியுரை சேவைகள் வழங்கப்பட்டிருந்ததெனினும் அத் திணைக்களத்துடன் மீளாய்வாண்டில் எவ்வித

உடன்படிக்கையும் ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறிருந்தும் மீளாய்வாண்டின் யூன் 30 ஆந் திகதி அத் திணைக்களத்துடன் ஏற்படுத்தப்பட்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் மதியுரை சேவைகளை வழங்கியமைக்காக ரூபா 8,723,050 செலுத்தப்பட வேண்டுமெனினும் இது தொடர்பில் எதுவித வெளிப்படுத்தல்களும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்காததுடன் கொடுப்பனவுகளுக்காக ஒதுக்கமொன்றும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

நிதிக்கூற்றுக்களில் குறிப்பிப்பட்டுள்ள கீழே காட்டப்பட்டுள்ள விடயங்களுக்குரிய பெறுமதிகளின் சரியான தன்மையினை உறுதிப்படுத்துவதற்கு போதியளவிலான சான்றுகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்படவில்லை.

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| | ரூபா | |
| நன்கொடை – பணம் | 18,577,319 | உரிய பதிவேடுகள் மற்றும் நன்கொடை பட்டோலைகள் |
| நன்கொடை – பொருள் | 58,890,541 | மேற்படி |
| உபகரண நன்கொடை – ஜப்பான் அரசு | 20,090,000 | மேற்படி |

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 03 வழங்குனர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 100,000 தொகையான முற்பணம் 2 முதல் 6 நிதியாண்டுகளுக்கு இடைப்பட்ட காலமாக தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஒலிப்பதிவுக்கூட சேவைகளை வழங்குவதற்காகவும் ருக்மணி தேவி திரையரங்கில் வகுப்புக்களை நடாத்துவதற்காகவும் அறவிடப்பட வேண்டிய ரூபா 70,400 தொகை 02 முதல் 05 வரையான காலமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகளுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிஅதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியளவில் மன்றத்தினால் நிலையான வைப்புக்களில் ரூபா 110,998,772 தொகையும் அழைப்பு வைப்புக்களில் ரூபா 20,687,000 தொகையும் முதலீடு செய்யப்பட்டிருந்ததெனினும் அதற்காக |

| | |
|---|---|
| | அதிகாரச்சட்டத்தின் அறிவுரைகளுக்கமைய நிதி அமைச்சரின் இணக்கப்பாட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் XV ஆம் பந்தியில் 10.1 ஆம் பிரிவு | சர்வதேச மாநாடொன்றிலும் கலாசார நிகழ்வொன்றிலும் பங்குபற்றிய மூன்று உத்தியோகத்தர்கள் நாட்டை விட்டுச் செல்லும் முன்னர் அதற்காக பிரதமரின் அங்கீகாரத்தினை பெற்றிருக்கவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| (i) நிதிப் பிரமாணம் 102 மற்றும் 757 (2) | முன்னைய ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வின் போது கண்டறியப்பட்ட 84 வகையான பொருட்களுக்கு உரித்தான 492 உருப்படிகளின் பற்றாக்குறை தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் மீளாய்வாண்டிலேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 702 மற்றும் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.9.1 ஆம் பிரிவு | எல்பின்ஸ்டன் கலையரங்கு நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக 2012 மே 31 ஆந் திகதி முதல் உழைப்புப் பங்களிப்பை பெற்றுக்கொண்ட சிவில் பாதுகாப்பு திணைக்களத்துடன் எதுவித உடன்படிக்கைகளும் மீளாய்வாண்டின் இறுதி வரை ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. எனினும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையில் 37,549 மனித நாட்கள் உழைப்பிற்காக ரூபா 16,897,050 தொகை அத் திணைக்களத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (iii) நிதிப் பிரமாணம் 756 | வருடாந்த பொருள் மெய்மையாய்விற்காக மெய்மையாய்வுச் சபை ஒன்று நியமிக்கப்படுவது ஒவ்வொரு ஆண்டும் திசெம்பர் 15 அல்லது அதற்கு அண்மித்ததாக மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக மெய்மையாய்வுச் சபை நியமனம் மற்றும் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்வதற்கு 2015 யூன் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) நிதிப் பிரமாணம் 380 மற்றும் 381 | ருக்மணி தேவி ஞாபகார்த்த புலமைப்பரிசில் நிதியத்தின் பெயரில் இருந்த வங்கிக் கணக்கினை மூடி அதிலிருந்த ரூபா 56,575 தொகையானது டவர் நடனத்தொகுப்பு திரையரங்கு (Tower Repertory Theatre) எனும் பெயரில் வங்கிக் கணக்கொன்றினை ஆரம்பிப்பதற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (v) | நிதிப் பிரமாணம் 371(2)(ஆ) | பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக 04 உத்தியோகத்தர்களால் 15 சந்தர்ப்பங்களில் ரூபா 20,000 இனை விஞ்சி உப கட்டுநிதி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறு பெறப்பட்ட முற்பணங்களின் கூட்டுத்தொகை ரூபா 1,184,575 ஆகும். மேலும், 05 உத்தியோகத்தர்களால் 07 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 555,900 கூட்டுத்தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதிகளில் 30 – 61 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சினை செலவிடப்படாமல் சேகரிக்கப்பட்டிருந்தது. |
| (ஈ) | 1999 பெப்ரவரி 26 ஆந் திகதிய 02/199 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | கையடக்கத் தொலைபேசிகளை அரச செலவில் வழங்குதல் அமைச்சரவை செயலாளரொருவருக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ள போது 07 உத்தியோகத்தர்களுக்காக 07 கையடக்கத் தொலைபேசிகளை வழங்குவதற்கு ரூபா 200,900 செலவிடபட்டிருந்ததுடன் மன்றத்தின் வருடாந்த கொள்வனவு திட்டத்தில் இதற்காக நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.5 ஆம் பந்தி | பணிப்பாளர் (நடனம், மேம்படுத்தல், கல்வி மற்றும் நிகழ்ச்சித்திட்டம்) பதவியானது திணைக்கள தலைவர் பதவிக்கு சமனான பதவியாக கருதி உத்தியோகபூர்வ வாகனமொன்று வழங்கப்பட்டு சுற்றறிக்கைக்கு முரணாக மாதாந்தம் 140 லீட்டர் எரிபொருள் கொடுப்பனவினை செலுத்துவதற்காக மீளாய்வாண்டில் ரூபா 268,800 செலவிடப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான டவர் மண்டப திரையரங்கு மன்றத்தின் நிதி விளைவுகள் ரூபா 12,681,847 பற்றாக்குறையாக இருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 8,370,607 ஆகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 4,311,240 தொகையான அதிகரிப்பொன்று காணப்பட்டது. அரச மானியங்கள், செயற்பாட்டு வருமானம் மற்றும் நிகழ்ச்சித்திட்ட வருமானங்கள் ரூபா 4,874,458 இனால் அதிகரித்திருந்ததெனினும் மன்றத்தின் ஏனைய வருமானங்கள் ரூபா 4,899,812 இனால் குறைவடைந்திருந்தமை மற்றும் நிர்வாக மற்றும் தாபன செலவினம் ரூபா 4,679,982 இனால் அதிகரித்திருந்மை இந்த அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

## 4 செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொள்வனவு திட்டத்தின் பிரகாரம் எல்பின்ஸ்டன் திரையரங்கு மன்றத்தினை நவீனமயப்படுத்தல் செயற்திட்டத்தில் மீளாய்வாண்டின் இறுதியில் நவீனமயப்படுத்தலுக்கு உரித்தான 18 முக்கியமான செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டு ரூபா 170.6 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததெனினும் அதன் பிரகாரம் சில செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. இச் செயற்பாடுகள் 2015 மார்ச் மாதம் வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிராததுடன் அந்த நடவடிக்கைகளின் சிக்கல்வாய்ந்த தன்மை மற்றும் நவீனமயமாக்கல் நடவடிக்கைகளுக்காக அரச நிதியைப் பெறுவதிலுள்ள தாமதமும் இதன் செயலாற்றல் குறைவடைந்தமைக்கு காரணமாகியிருந்தது.

(ஆ) செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டினுள் 08 நாடக செயலமர்வுகளை நடாத்துவதற்கும் 02 நாடகங்களை தயாரிப்பதற்கும் திட்டமிடப்பட்டு முறையே ரூபா 800,000 மற்றும் ரூபா 1,800,000 வீதம் நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததெனினும் ஆண்டினுள் 01 நாடக செயலமர்வு மாத்திரமே நடாத்தப்பட்டிருந்ததுடன் ஒரு நாடகம் மாத்திரமே தயாரிக்கப்பட்டிருந்தது.

### 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) டவர் ஹோல் மன்றத்தால் பேணப்பட்டு வந்த ருக்மணி தேவி திரையரங்கின் வருமானம் ஊழியர்களின் சம்பளத்தைச் செலுத்துவதற்கேனும் போதியதாக இருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது அவ்வருமானம் ரூபா 562,220 ஆகக் காணப்பட்ட போதிலும் ஊழியர்களின் சம்பளச் செலவினம் ரூபா 1,178,220 தொகையாக இருந்தது. திரையரங்கின் பராமரிப்புச் செலவினமேனும் மேவுகை செய்யக்கூடிய வகையில் அவ் வருமானத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது 6 நம்பிக்கைப் பொறுப்புச் சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன. சட்டரீதியான நிலையின் படி, நம்பிக்கைப் பொறுப்பு அங்கத்துவத்தை கொண்ட மாகாண மற்றும் உள்ளூராட்சி நடவடிக்கைகள் தொடர்பான விடயப் பொறுப்பு அமைச்சரும் கொழும்பு மாநகர சபை நகர பிதாவும் ஒரு கூட்டத்தொடருக்கேனும் கலந்துகொள்ளாமை தொடர்பாக பொறுப்பாளர் சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) எல்பின்ஸ்டன் திரையரங்கில் மின் கம்பிகளை இழுத்தல் மற்றும் மின் உபகரணங்களை பொருத்தும் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்த கம்பனியால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 2,905,790 தொகையான முற்பணப் பிணை முறிகளின் காலஎல்லை மீளாய்வாண்டின் ஒக்தோபர் 03 ஆம் திகதி முடிவடைந்திருந்தது. கம்பனியுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையில் இச் செயற்பாட்டினை பூர்த்தி செய்யும் காலம் 02 மாதங்கள் தாமதமடைந்திருந்ததுடன் பிணை முறிகளின் கால எல்லையினை புதுப்பித்துக் கொள்வதற்கும் புதிய உடன்படிக்கையொன்றினை மேற்கொள்வதற்கு 2015 யூன் மாத இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2013 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் பாவனைக்குதவாத 45 பொருள் வகைகளின் 110 விடயங்கள் விற்பனைக்கு உகந்தவையாக இனங்காணப்பட்டிருந்ததெனினும் 2015 யூன் ஆம் திகதி வரையிலும் அப் பொருட்களை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) எல்பின்ஸ்டன் திரையரங்கினை நவீனமயப்படுத்தும் செயற்பாடுகளுக்காக 2011 ஆகஸ்ட் 01 திகதி முதல் திரையரங்கு மூடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதி வரை மூடப்பட்டிருந்த காலம் 03 வருடங்களும் 05 மாதங்களுமாவதுடன், கணக்காய்வு திகதி வரையிலும் நவீனமயப்படுத்தல் செயற்பாடுகளை பூர்த்தி செய்ய முடியாதிருந்தது. இதன் காரணமாக திரையரங்கில் உழைக்கக்கூடியதாயிருந்த ஏறத்தாள ரூபா 6 மில்லியன் அளவிலான வருடாந்த வருமானம் மன்றத்தால் இழக்கப்பட்டிருந்தது.

**4.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நாடக மற்றும் திரையரங்கு புலமைப்பரிசில் நிதியத்தின் கணக்கொன்றாக ரூபா 193,123 தொகையானது நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த நிதியத்திலிருந்து மீளாய்வாண்டின் போது எதுவித புலமைப்பரிசில்களும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) டவர் மண்டபத்தினால் தயாரிக்கப்பட்ட ரூபா 122,774 பெறுமதியான 1,260 இறுவெட்டுக்கள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டிருந்தன.

(இ) 2014 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் வெளிநாட்டு பிரயாணச் செலவுகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த தொகை ரூபா 8,000 எனினும் செலவிடப்பட்ட தொகையானது ரூபா 2,394,065 ஆக இருந்தது. பாதீட்டு மதிப்பீட்டினை விஞ்சி ரூபா 2,386,065 செலவிடும் போது நிதி ஒதுக்கீடுகளின் பொருண்மைத் தன்மை தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இந்தியாவில் நடைபெற்ற நாடக நிகழ்வொன்றில் பங்குபற்றிய நாடக குழுவொன்றிற்காக ரூபா 793,500 தொகையான விமான பயணச்சீட்டு செலவினம் கலாசார அமைச்சினால் 2015 ஆம் ஆண்டிற்குரிய நிதியேற்பாடுகளில் மீளளிப்பு செய்யும் இணக்கப்பாட்டில் மன்றத்தினால் அச்செலவினம் ஏற்கப்பட்டிருந்ததெனினும் 2015 யூன் 30 ஆம் திகதி வரையிலும் குறித்த மீளளிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.4 நிதியத்தின் குறைவான பயன்பாடு**

ருக்மணி தேவி திரையரங்கு நவீனமயமாக்கல் நடவடிக்கைகளுக்காக திறைசேரியால் 2012 செப்தெம்பர் மற்றும் ஒக்டோபர் மாதங்களின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 7.5 மில்லியன் தொகை உரிய நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படாது மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஏழு நாள் அழைப்பு வைப்புக்களில் அவ்வப்போது முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் அத் திரையரங்கின் நவீனமயமாக்கல் நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, மூலதனச் செலவினத்திற்காக 2011 நவம்பர் 11 ஆம் திகதி திறைசேரியால் வழங்கப்பட்டிருந்த ரூபா 20 மில்லியன் தொகை உரிய செயற்பாட்டிற்காகப் பயன்படுத்தப்படாது அவ்வப்போது ஏழு நாள் அழைப்பு வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

### 4.5 வேறு அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்த வளங்கள்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ / 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவிற்கு முரணாக மன்றத்திற்கு சொந்தமான வேன் வண்டியொன்று கலை மற்றும் கலாச்சார நடவடிக்கை அமைச்சு மற்றும் அதன் அமைச்சரின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டிருந்ததுடன் வாகனத்தினை 6,278 கி.மீ. தூரம் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. மன்றத்திற்கு சொந்தமான மற்றுமொரு வாகனமும் 03 வெளி நபர்களின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டு 2,095 கி.மீ. தூரம் ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

### 4.6 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதி வரையில் மன்றத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 91 ஆக இருந்த போதிலும் அத்தினத்தில் உள்ளபடியான பதவியணியினர் 65 ஆகக் காணப்பட்டது. வெற்றிடமாக உள்ள 26 பதவிகளையும் நிரப்புவதற்காக இதுவரையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 13.3 ஆம் பிரிவின் பிரகாரம் செயற்படாமல் மன்றத்தினால் இரு உத்தியோகத்தர்கள், ஒருவர் 06 வருடங்களாகவும் மற்றொருவர் 02 வருடங்களாகவும் பதில் கடமை அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். பதில் கடமைக்காக அவ்விரு உத்தியோகத்தர்களுக்கும் மீளாய்வாண்டிற்காக ரூபா 164,415 செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 2005 திசெம்பர் 23 ஆம் திகதி முதல் மன்றத்தின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ள அதன் முன்னாள் பணிப்பாளர் நாயகத்திற்கு அப் பதவிக்குரிய HM-1-7 கொண்ட சம்பளத்திட்டத்தின் அடிப்படை சம்பள தொகுதியிலிருந்து 15 சம்பள அதிகரிப்புக்களை வழங்கி உச்ச சம்பள தொகுதிக்குரிய ரூபா 55,030 தொகையான சம்பளத்தினை நிறுவி 2007 மார்ச் 01 ஆந் திகதி முதல் 2015 பெப்ரவரி 02 ஆந் திகதி வரை சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. 2006 செப்தெம்பர் 22 திகதிய 30 ஆம் இலக்க மற்றும் 2009 மே 06 ஆந் திகதிய 39 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் சம்பளத்தினை தீர்மானிப்பதற்கு முன்னர் உரிய அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

### 4.7 வாகனப் பயன்பாடு

மன்றத்திற்குச் சொந்தமான பேரூந்து வண்டி கலாசார அமைச்சின் தேவைப்பட்டிற்காக 09 தினங்களுக்க வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன் அக்காலத்தினுள் 2,086 கி.மீ தூரம் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததெனினும் மன்றத்திற்கு அறவிடப்பட வேண்டிய வாடகை ரூபா 133,815 தொகையினை அறவிடுவதற்கு 2015 யூன் 30 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2003 ஜூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரச சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின்

பிரகாரம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் நிதிக்கூற்றுக்கள் 2015 மே 25 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான திருத்தஞ்செய்யப்பட்ட பாதீட்டின் படி மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினத்தை ஆண்டின் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினத்துடன் ஒப்பிடும் போது செலவின விடயங்களில் 29 சதவீதத்திற்கும் 19,907 சதவீதத்திற்கும் இடையிலான முரண்கள் அவதானிக்கப்பட்டதுடன், வருமான விடயங்களில் 27 சதவீதத்திற்கும் 95 சதவீதத்திற்கும் இடையிலான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமொன்றாக பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளின் நலிவுகள் மன்றத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அவ்வப்போது அறிவிக்கப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) இருப்புக் கட்டுப்பாடு
(இ) ஊழியர் நிர்வாகம்
(ஈ) சொத்து முகாமைத்துவம்
(உ) ஒப்பந்த நிர்வாகம்